*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*17 06 2026* *WEDNESDAY 6 30 PM*

*வணக்கம்-மாநிலச்செய்திகள்*
*தலைப்புச் செய்திகள்*

*1)* *வேளாண் துறையில் தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*2)* *பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.*

*3)* *தமிழகத்தின் நிதி மேலாண்மைக்கான செயல்திட்டத்தை த.வெ.க அரசு அறிவிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.*

*4)* *சட்டம் ஒழுங்கை முறையாக பராமரிக்க த.வெ.க. அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.*

*5)* *உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின்* ***Deepak*** *அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*வேளாண் துறையில் தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.*

*சூரியசக்தி பயன்பாடு வேளாண் துறையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 2014ஆம் ஆண்டு இரண்டரை லட்சம் கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, தற்போது 8 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

பாதுகாப்பு படையை நவீனமயமாக்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ள த.வெ.க. அரசு, நிதி மேலாண்மைக்கான செயல்திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தின் கடன் சுமை, 13 லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாயாகவும், வருவாய் பற்றாக்குறை 78 ஆயிரத்து 326 கோடி ரூபாயாகவும் உள்ளதாக வெள்ளை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முந்தைய திமுக அரசு ஏற்படுத்திய நிதிச்சுமையை சுட்டிக்காட்டுவதை விட, அதனை சரிசெய்வதற்கான திட்டம் குறித்து மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய கடமை த.வெ.க. அரசுக்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை செயல்படுத்த த.வெ.க. அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>><<<<<

*தமிழகத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களால் புதிதாக கொள்முதல் செய்யப்படும் பேருந்துகள், குளிர்சாதன மின்சார பேருந்துகளாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*இன்று சென்னையில் போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வின் போது முதலமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கியதாக மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*பேருந்துக்கென தனி வழித்தடத்தை ஏற்படுத்துவது குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு விஜய் இந்த கூட்டத்தில் வலியுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*சட்டம் ஒழுங்கை முறையாக பராமரிக்க த.வெ.க. அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.*

*இதுதொடர்பாக அக்கட்சி சமூகவலைளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களில் த.வெ.க-வினரே ஈடுபடுவதாக குறை கூறியுள்ளது.*

*இதனை தடுத்து நிறுத்த எந்தவொரு நடவடிக்கையையும் முதலமைச்சர் திரு. விஜய் மேற்கொள்ளவில்லை என்றும் திமுக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அரசுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் கடன் இருப்பதாக கூறி, வெள்ளை அறிக்கை வெளியிடுவது, மக்களை ஏமாற்றும் செயல் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவல்துறை சுதந்திரமாக செயல்படவில்லை என்று குற்றம் சாட்டினார்.*

*இதன் காரணமாக, த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் 207 குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.*

*கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 17 பாலியல் குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*முதலமைச்சர் திரு. விஜய், திரைப்பட பிரபலங்களை சந்திப்பதிலும், புகைப்படங்கள் எடுப்பதிலும் மட்டுமே ஆர்வம் காட்டுவதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.*

*>>>>><<<<<*

நிதிநிலையை மேம்படுத்தவும், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவும் த.வெ.க. அரசிடம் செயல்திட்டம் இருக்கிறதா என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசின் கடன் சுமை 13 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது என்று வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் புதிதாக எந்த வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தாமல், தற்போது செயல்பாட்டில் உள்ள திட்டங்களை தொடர்வதற்கும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும், மூன்று லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கும் நிலை உள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை த.வெ.க. அரசு எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

>>>>><<<<<

நீலகிரி, திண்டுக்கல், தேனி உள்ளிட்ட 13 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - துரை 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. சாய் ப்ரனீத்-தும், கடலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. விவேகானந்த சுக்லா-வும், தருமபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. அருண் கபிலனும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் போதைப்பொருளை ஒழிக்கவும், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திரு. மதிவாணன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

கடலூர் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பயிற்றுநர்களுக்கான 3 நாள் பயிற்சி முகாமை ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் வாஞ்சிநாதனின் நினைவு தினத்தை ஒட்டி, தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் மரியாதை செலுத்தினார்.

>>>>><<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள இந்தியன் வங்கியின் சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்திற்கான கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திரு. தினேஷ்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மதுரையில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வின் போது, 200 கிலோ எடையுள்ள கெட்டுப்போன இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>><<<<<

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின்படி, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் கைபேசி பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

சென்னை, டெய்லர் சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் சுகாதாரத்திற்கான இணை ஆணையாளர் திரு. ஜெயசீலன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Deepak** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 5-0 என்ற புள்ளிக் கணக்கில் ஜப்பானின் Okazawa Sewon-ஐ வென்றார்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் ஜோதியும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

உலக கோப்பை Pickleball போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*18 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் கேப்டனாக அர்ஜூன் சிங்கும், 14 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் கேப்டனாக Veer Shah-வும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இப்போட்டி, வியட்நாமில் ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.*

*>>>>><<<<<*

*பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில்,* **இ***ந்தியாவின் Nithesh - Thulasimathi Murugesan இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆப்கானிஸ்தான் வெற்றிபெற 403 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, 49 புள்ளி ஐந்து ஓவரில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*சுப்மன் கில் 110 பந்துகளில் 154 ரன்னும், இஷான் கிஷன் 79 பந்துகளில் 125 ரன்னும் குவித்தனர்.*

*>>>>>END<<<<<*